*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Nannagaiyar and Avvaiyar's Kurunthogai Poems: A Study through Akathinai Principles

**S. Nirmala[1], Dr. A. Maria Sebastin[2*],**
[1]22PHD0268, Full-time PhD Research Scholar, Department of Tamil, School of Social Sciences and Languages (SSL), VIT University, Vellore.
Email: nirmala.s2022@vitstudent.ac.in | Tel: 8667013569
[2]Research Guide, Assistant Professor, School of Social Sciences and Languages (SSL), VIT University, Vellore.
*Correspondence: mariasebastin.a@vit.ac.in

**Article Info**
Received on 21-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

Akam poems (interior/love poetry) emerged as an expansive literary form centered on domestic life and internal thoughts, beautifully illustrating the lifestyle of the ancient Tamils. Kurunthogai is considered a vital collection within Sangam literature. Known for its concise lines and precise delivery of ideas, it is recognized as the first among the Ettuthogai (Eight Anthologies) to be compiled. Compiled by Purikko, Kurunthogai consists of 401 poems, including the celebratory invocation to God, and is often honored with the epithet "Nalla" (The Good Kurunthogai).

Sangam literature reveals that people followed cultural and lifestyle practices dictated by their specific geographical landscapes (Thinai). Based on the five-fold classification of land, people organized their lives according to their needs, and Akam literature serves as a mirror to these life experiences. The fundamental elements of this literary genre are Muthal (Primary source: land and time), Karu (Environmental objects/native elements), and Uri (Human emotions/conduct).

Grounded in these elements, Tholkappiyar explains the way of life across the five Thinais centered on love. While Muthalporul is divided into land and season/time, Karupporul encompasses everything from deities to musical notes. Uripporul expresses the specific codes of conduct for each landscape—ranging from union and pining to separation. The objective of this research paper is to analyze the Kurunthogai poems written by the Sangam women poets Kachippettu Nannagaiyar (Poem 8) and Avvaiyar (Poem 15) through the lens of these Akathinai principles.

***KEYWORDS:*** *Nannagaiyar, Avvaiyar, Land (Nilam), Time (Pozhudu), Karupporul, Uripporul, Hero (Thalaivan), Heroine (Thalaivi).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

# நன்னாகையார், ஔவையார் பாடிய குறுந்தொகைப் பாடல்களில் அகத்திணைக்கோட்பாடுகள்

[1]**சே.நிர்மலா, 22PHD0268,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, வி.ஐ.டி, பல்கலைக்கழகம், வேலூர்.
[2*]**முனைவர் அ.மரிய செபஸ்தியான்,** நெறியாளர்,
உதவிப்பேராசிரியர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி,
வி.ஐ.டி, பல்கலைக்கழகம், வேலூர்.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

தமிழர்களின் வாழ்வியலை அழகுப்படுத்தும் வகையில் அகச்சிந்தனையை முன்வைத்து உருவான இலக்கிய வடிவமாக அகப்பாடல்கள் பெரிதும் விரிந்திருந்தன. சங்க இலக்கியத்தின் முக்கியத் தொகுப்பாகக் கருதப்படுவது **குறுந்தொகை** ஆகும். குறுகிய அடிகளை கொண்டு கருத்துக்களைத் துல்லியமாக எடுத்துரைக்கும் இந்நூல், தொகை நூல்களில் முதன்மையாகத் தொகுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. **பூரிக்கோ** என்பவரால் தொகுக்கப்பட்ட குறுந்தொகை, "நல்ல" என்னும் அடைமொழியுடன், கடவுள் வாழ்த்தை உடைய 401 பாடல்களைக் கொண்டது. திணைக்கேற்ப மக்கள் தங்களது வாழ்க்கை முறைகளின் பண்பாட்டை பின்பற்றினர் என்பதைச் சங்க இலக்கியம் தெரிவிக்கிறது. நில அமைப்பின்படி வகுக்கப்படும் ஐந்நிலப் பாகுப்பாட்டின்படி மக்கள் தங்கள் தேவைகளுக்கேற்ப வாழ்வமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்களது வாழ்க்கை அனுபவங்களை அக இலக்கியமாகக் காட்டுகிறது. **முதல், கரு, உரிப்பொருள்** என்பவை இவ்வகை இலக்கியத்தின் மூலக்கூறுகள் ஆகும். தொல்காப்பியர் இவற்றை அடிப்படையாகக் கொண்டு, அன்பை மையமாகக் கொண்ட ஐந்திணை வாழ்வியல் முறைகளை விளக்குகின்றார். இதில், முதற்பொருள் "நிலம்" மற்றும் "பொழுது" எனப் பிரிக்கப்படுவதோடு, தெய்வம் முதல் பண் வரை சொல்லப்படும் கருப்பொருட்களும், ஒவ்வொரு திணைக்கேற்ப ஒழுக்கநெறிகளையும் – புணர்ச்சி முதல் பிரிதல், ஈர்வு வரை – வெளிப்படுத்துகின்றன. இக்கட்டுரையின் நோக்கமாக, இந்த அகத்திணை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு, **கச்சிப்பேட்டு நன்னாகையார் (பாடல் 8)** மற்றும் **ஔவையார் (பாடல் 15)** ஆகிய சங்கப் பெண்புலவர்கள் எழுதிய குறுந்தொகைப் பாடல்களை அகத்திணைக்கோட்பாட்டின் பார்வையில் மூலம் ஆய்வு செய்வது நோக்கமாக அமைந்துள்ளது.

**திறல் சொற்கள்**

நன்னாகையார், ஔவையார், நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள், தலைவன், தலைவி.

**முன்னுரை**

**குறுந்தொகையில் இடம்பெறும் அகப்பாடல்கள், ஐவகைத் திணைகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளை, முப்பொருள் – முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

**– அடிப்படையில் அழகாகக் காட்டுகின்றன.** இந்த முப்பொருள்களில், *முதற்பொருளாக* நிலமும் பொழுதும், *கருப்பொருளாக* தெய்வம், மக்கள், போன்றவை இடம்பெறுகின்றன. *உரிப்பொருளாக,* புணர்ச்சி, இருத்தல், ஊடல், பிரிதல், இரங்கல் ஆகிய ஐந்திணையை ஒட்டிய ஒழுக்கநெறிகள் இடம்பெறுகின்றன. இவை அனைத்தும் குறுந்தொகையில் உள்ள ஒவ்வொரு பாடலிலும், தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி ஆகிய குணநாயகர்களின் வாயிலாக, இயற்கையோடு இணைந்த மனித உணர்வுகளாக வெளிப்படுகின்றன. இவ்வாறு அகத்திணை அமைப்பைப் பயன்படுத்தி, கச்சிப்பேட்டு நன்னாகையார் மற்றும் ஔவையார் குறுந்தொகைப் பாடிய பாடல்களில் மக்களின் திணை வாழ்க்கையை பிரதிபலிக்கும் வகையில் அகத்திணைக்கோட்பாட்டை இடம்பெற்றுள்ள செய்துள்ளதை நன்கு உணரலாம்.

**ஐந்திணை**

குறிஞ்சி முதலான ஐந்திணைகளில் நிலத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருள்களாக வகுத்து, மக்கள் தங்களது வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்ததைக் காணலாம். இவ்வகை முப்பொருள்களின் **பகுப்பும்**, அவை பாடல்களில் எவ்வாறு **வைக்கப்படுகின்றன** என்பதையும், செம்மையான வாழ்க்கை முறையை **புலவர்களின் செய்யுள்களில் தெளிவாகப் பிரதிபலிக்கப்படுகிறது.**

**"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுள் பயின்றவை நாடுங்காலை"**

**(தொல், பொருள்,அகத்திணையியல்-பா.9)**

முப்பொருளைக் குறித்து **"மனித வாழ்வின் அடித்தளமாக நிலத்தையும் காலத்தையும் இலக்கணம் முதற்பொருள் என்று சுட்டி. முதற்பொருளின் இணைப்பில் உருவாகும் பயிர் வகைகள், பறவைகள், விலங்குகள் போன்றவையெல்லாம் கருப்பொருள் என வழங்கப்படுகின்றன. கருப்பொருள் கொண்டு நடத்தும் "வாழ்க்கைநெறி" உரிப்பொருள் என்று வழங்கப்படுகின்றது. (ச.வேலுமணி)** இந்திணையைப் பற்றிய நிலம், உயிரினம், வரலாற்றியல் பதிவுகள் சங்கப் பாடல்களில் இடம்பெறுதலை உணர்த்துவதை **"மக்களின் வாழ்க்கைப் பாதையைச் செம்மையாக உணர்வதற்கு தேவையாக இருந்தது. அதுப்போலவே மலையும், ஆறும், காடும், வயலும், கடலும், மரம், செடி, கொடிகளும், பறவை, விலங்குகளும் மக்கள் வாழ்க்கைக்கு எவ்வாறு பயன்பட்டன அவர்களின் உணர்ச்சிகளை எவ்வெவ்வாறு பயன்படுத்தக் காரணமாக இருந்தன என்பதையும் உணர இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. (சி.பொ.சீனிவாசன்)** இதன் மூலம் மக்களின் வாழ்வியலை நம்மால் ஐந்திணை வழியே அறிந்துகொள்ளமுடிகின்றது.

**முதற்பொருள்**

நிலமும் (ஐவகை நிலம்) பொழுதும் (காலம்) முதற்பொருளாக அமைந்து, அதனடியில் கருப்பொருளும் உரிப்பொருளும் உருவாகின்றன. இதில், முதன்மை மற்றும் அடிப்படையாக விளங்குவது "நிலம்" ஆகும். பொழுது, பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது என்ற இரு

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

வகைகளாகப் பிரிக்கப்பட்டு, காலத்திற்கான வகைப்படுத்தலாக அமைந்துள்ளது. இவ்வகைப்பாட்டின் அடிப்படையில் தான் "முதற்பொருள்" எனும் அமைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. பெரும்பொழுது என்பது ஆண்டு அடிப்படையிலான காலக் கோட்பாட்டை (ஆறு பருவங்கள்), சிறுபொழுது என்பது நாள் அடிப்படையிலான பார்வையை (பகலில் மூன்று, இரவில் மூன்று – எனும் ஆறு சிறுபொழுதுகள்) குறிக்கின்றன. பொழுதுகளை பெரும் மற்றும் சிறு பொழுதுகளாகப் பிரித்து, வாழ்க்கைச் சூழலோடு இணைந்துள்ள முறையில் தொல்காப்பியர் விரிவாக குறிப்பிடுவதை காணலாம்.

**"முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"**
**(தொல்,பொருள்,அகத்திணையியல்-ப.23.4)**

இதனையே கச்சிப்பேட்டு நன்னாகையார் குறுந்தொகையில்

**"நீரெதிர் கருவிய காரெதிர் கிளைமழை**
**ஊதையங் குளிரோடு பேதுற்ற மயங்கிய**
**கூதிர் உருவிற் கூற்றம்**
**காதலாப் பிரிந்த ஏற்குறித்து வருமே" (குறுந்தொகை-197)**

**இப்பாடலில், நீரை ஏற்றுக் கொண்ட மின் முதலிய சக்திகளை உடையவனாகிய கார்காலத்தை எடுத்துக்கொண்டு, கிளைத்த மழையுடன் கூடிய ஊதைக் காற்றின் குளிர்ச்சியோடு மிகுந்த மயக்கத்துடன் கூதிர்க்காலம் இருப்பதை நெய்தல் நிலத்தில் அமைந்த பெரும்பொழுதுகளை நன்னாகையார் குறிப்பிடுவதை அறியலாம். முல்லை நிலத்தையும், முல்லை நிலத்தின் பொழுதாக அமைந்த பெரும்பொழுதினையும் பற்றியும், ஔவையார் பாடல்களில் காண முடிகின்றது.**

**"பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்**
**மீமிசைச் தாஅய வீஇ சுமந்துவந்**
**மறந்தோர் மன்ற மறவா நாமே**
**கால மாரி மாலை மாமழை**
**இன்னிசை யுருமின முரலும்**
**முன்வரல் ஏமம் செய்தகன் றோடு" (குறுந்தொகை-200)**

இப்பாடலில், முல்லை திணைக்கு பெரும்பொழுதான கார்ப்பருவத்தையும் (கார் காலம்), சிறுபொழுதான மாலை நேரத்தையும் காணமுடிகின்றது. முதற்பொருளாக அமைந்த நிலமும் பொழுதும் நிர்ணயிக்கும் அகத்திணையை நன்னாகையார் நெய்தல் நிலத்தைப்பற்றி, ஔவையார் முல்லை நிலத்தைப்பற்றி பாடும் இடங்களில், அந்த நிலங்களுக்கு ஏற்புடைய பொழுதுகளின் சிறப்பை எடுத்துரைப்பதை நன்கு அறியலாம்.

**நிலம்**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

ஐந்து வகையான நிலமாகிய குறிஞ்சி - மலை, முல்லை - காடு, மருதம் - வயல், நெய்தல் - கடல், பாலைக்கு தனியாக ஒரு நிலமில்லை என்பதை ,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருண்ணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (தொல்.பொருள். அகத்,ப-23.3)**

**திருமாலைக் தெய்வமாகக் கொண்டு வணங்கும், காடு சூழ்ந்த நிலப்பகுதி *முல்லை* எனவும், முருகன் காக்கும் மலைச்சூழ்ந்த நிலப்பகுதி *குறிஞ்சி* எனவும், இந்திரன் காக்கும் நீர்வளம் மிக்க ஆறு சூழ்ந்த நிலப்பகுதி *மருதம்* எனவும், வருணன் காக்கும் கடற்கரைப் பெருமணல் சூழ்ந்த நிலப்பகுதி *நெய்தல்* எனவும் சொல்லப்படும் எனத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதுவேனில் (மிகவும் வெதும்பிய வெந்நேர் பருவத்தில்) காடும் மலையும் வளம் இழந்து வறண்ட நிலமாக மாறுவதையே *பாலை* என வரையறுக்கப்படுவதைக் ‘சிலப்பதிகாரம்’ ஆகிய இலக்கியங்களில் காணலாம்.**

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல் பிரிந்து நடுங்குதுய ருறுத்துப்**
**பாலை என்பதொர் படிவங் கொள்ளும்” (சிலப்பதிகாரம் ப.167)**

**இப்பாடல் வரியில் “அடியாருக்கு நல்லார் முல்லை குறிஞ்சி” எனக் கூறுவது, பழைய நடைமுறையிலிருந்து விலகி, இயற்கையுடன் இணைந்த நல்ல இயல்புகளை இழந்த நிலையில், வழிதவறியவரை நடுங்கச் செய்யும் துயரத்தையும் வறுமையையும் உருவாக்கும் நிலமாக** *பாலை* **நிலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. உலகளாவிய நிலவியல் கூறுகளைப்போல், தமிழகத்திலும்** *குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை* **என்ற ஐந்திணை நிலங்கள் காணப்படுகின்றன. ஒரு நாட்டின் இயற்கைச் சூழலுக்கும் அதன் இலக்கியத்திற்கும் உள்ள நெருக்கமான தொடர்பே தமிழிலக்கியத்தில் இத்தகைய நிலவியல் அடிப்படையில் பாகுப்பாடு ஏற்படுவதற்குக் காரணமாகும். வட இந்திய இலக்கியங்களில் இவ்வகையான பாகுப்பாடு காணப்படாததற்குக் காரணம், அப்பகுதிகளில் இத்தகைய இயற்கை நில அமைப்புகள் இல்லாததையே *(அ. தட்சிணாமூர்த்தி)* கூறுகிறார். இந்நிலையில், இயற்கையின் அழகு கெட்டுப் போன பாலை நிலத்தின் கொடுமையைக் குறித்து ஔவையார் தனது பாடல்களில் உரைக்கின்றார் என்பதையும் நாம் அறியலாம்.**

**“வெந்தாறற் கடுவெளி பொங்காப் போந்தென**
**நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**
**மலையுடை அருஞ்சுரம் என்பநம்**
**முலையிடை முனிநர் சென்ற ஆறே” (குறுந்தொகை-39)**

இப்பாடலில், தலைவன் பிரிந்து சென்ற வழியில் வீசும் வெம்மையான, வலி தரும் விரைவான

காற்று மரக்கிளைகளை அசைக்கும் காரணமாக, வாகை மரத்தின் வற்றிய இலைகள் ஒலிக்கின்றன. இதன் வழியாக, பாலை நிலத்தின் கொடுமையும் அதன் இயற்கைச் சூழலும் தலைவியின் வாயிலாக எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்வாறு பாலை நிலத்தின் வன்முறையான சூழ்நிலை குறித்து நன்னாகையார் பாடல்களில் தெளிவாகக் காணலாம்.

**"பழுஉப்பல் அன்ன பருவுகிர் பாவடி**
**இருங்களிற் றினநிரை யேந்தல் வரின்மாய்ந்**
**தறைமடி கரும்பின் கண்ணிடை யன்ன**
**-------- ----------- ------------- ---------------**
**வனப ராகத்தஞ் சென்ற நட்டே" (குறுந்தொகை- 180)**

தலைவன் பாலை நிலத்தைக் கடந்து பொருள் பெற்றாரோ, இலரோ எனத் தலைவி அஞ்சும் நிலையில், அந்த நிலம் பேய்போன்ற பயங்கரக் காட்சியாக வரைவடிவம் பெறுகிறது. அத்துடன், அங்கு ஒற்றை மூங்கில் ஓங்கி வளர்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. பாலை நிலத்தின் கொடுமைகளை, அதன் சூழலையும், ஔவையாரும் நன்னாகையாரும் தங்கள் பாடல்களில் கொடுகளை உவமையாகக் கொண்டு அழுத்தமாக எடுத்துரைத்திருப்பதை நாம் அறியலாம்.

**பொழுது**

திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் பொழுதானது இருவகைப்படும். அவை ஒவ்வொரு நிலத்திற்கேற்ப பெரும்பொழுது, சிறுபொழுது என அமைகின்றது. குறிஞ்சி திணைக்கு பெரும்பொழுது குளிர், முன்பனி (ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை), சிறுபொழுது யாமம் , முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது கார்காலத்தையும் ( ஆவணி, புரட்டாசி) சிறுபொழுது மாலை, பாலை திணைக்குரிய பெரும்பொழுது இளவேனில், முதுவேனில், பின்பனி (மாசி முதல் ஆடி வரை) காலத்தையும் சிறுபொழுது நண்பகல், மருத திணைக்கு பெரும்பொழுது ஆறும் பெரும்பொழுதையும் வைகறை என்னும் சிறுபொழுதும், நெய்தல் திணைக்கு பெரும்பொழுது ஆறுபெரும்பொழுதும் வைகறை மற்றும் ஏற்பாடு என்னும் சிறுபொழுது பொற்று காணப்படுகின்றது. இதனை நம் முன்னோர்கள் ஓராண்டை ஆறு பருவங்களாக கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் பகுத்துள்ளனர். சிறுபொழுதானது காலை முதல் வைகறை வரை ஒரு நாளின் ஆறு கூறுகளாக பிரித்து மனிதர்களின் விதிமுறைகளுக்கு உட்படுத்தி காணப்படுகின்றது. கார்காலமானது மழைக்காலத்தையும், குளிர், முன்பனியானது முன்னிரவில் பனிப்பெய்யும் காலத்தையும் பின்பனியானது பின்னிரவில் பனிப்பெய்யும் காலத்தையும் வேனில் காலமானது வெயில் காலத்தை குறிப்பதாக அமைகின்றது. இதனையே நன்னாகையார்

**"விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்**
**செழும்பல் குன்றம் றோக்கிப்**
**பெருங்கலி வான மோர்தரும் பொழுதே" (குறுந்தொகை-287)**

இப்பாடலின் மாதங்கள் பன்னிரண்டும் கர்ப்பமாக இருந்ததன் காரணமாக நடக்க இயலாமல் சோர்ந்துபோன, பச்சை புளி சுவைக்கு ஆசைப்பட்டு இருக்கும், தன் முதல் குழந்தையை எதிர்பார்க்கும் பெண்களைப் போல, மேகங்கள் வானத்தில் உயர முடியாமல் நீரைச் சுமந்து,

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, பல்வேறு வளமான மலைகளை நோக்கி பெரிய முழக்கத்துடன் பறக்கின்றன. இந்தக் காட்சி, முல்லை நிலம் எனும் தமிழ் நாட்டின் பசுமையுடன் கூடிய நிலப்பகுதிக்கு ஏற்ற வகையில் வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த உவமை, இயற்கையின் ஒவ்வொரு நிகழ்வையும் மனித உணர்வுகளுடன் இணைத்து விவரிக்கும் சங்க காலக் கவிஞர்களின் நுண்ணறிவையும், கற்பனையையும் வெளிப்படுத்துகிறது.

**கருப்பொருள்**

ஐவகை நிலங்களுக்கும் ஏற்ப கருப்பொருள்கள் மாறுபடும் என்பதை தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**"தெய்வம் உணாவே மாமதம் புட் பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப" (தொல். பொருள். ப-30,20)**

தொல்காப்பியத்தில் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, யாழ், தொழில், பண் என அமையும் இவற்றின் வகையும் இவை போன்ற பிறவும்கருப்பொருளாகும். அதாவது தெய்வம், மக்கள், உணவு, மரம், பறவை, பறை, தொழில், யாழ், பண், பூ, நீர், ஊர் என்பவனவாகும். இதனை ஔவையார் பாடலில் அறியலாம்.

**"சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ**
**நம்பொற் பசக்குங் காலைத் தம்பொற்**
**------ ----------- ---------- ------------**
**----------- ----------- ----------- ----------**
**புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை**
**மென்மயில் எருத்தில் பெருஞ்சினை**
**கான வைப்பிற் புன்புலத் தானே" (குறுந்தொகை-183)**

முல்லை நிலத்திற்கு கருப்பொருளாக அமைந்த விலங்கை குறிக்கும் முயல், மான் பற்றியும் இந்நிலத்தின் மரமான கொன்றை, காயா பற்றியும் திருமாலுக்கு சாற்றப்படும் பூவான முல்லைபூ பற்றியும் அல்லோர்கள் போன்றவற்றையும் எடுத்துரைப்பதாக முல்லை நிலத்தின் தெய்வம், விலங்கு, மரம், மக்கள் போன்ற கருப்பொருள்கள் அடங்கியுள்ளதை காணமுடிகின்றது.

**உரிப்பொருள்**

**"போக்கெல்லாம் பாலை, புணர்தல் நறுகுறிஞ்சி**
**ஆக்கஞ்சே ரூடல் அணிமருதம்- நோக்குங்கால்**
**இல்லிருத்தல் முல்லை இரங்கள் நறுநெய்தல்**
**சொல்லிருச்த நூலின் றொகை" (தொல், காலத்தமிழ்,ப-81)**

உரிப்பொருள் எது என்பதனைப் புலவர் குழந்தை பாடலில் அறியமுடிகின்றது. ஐந்திணைக்குரிய ஒழுக்கங்கள் உரிப்பொருள் என அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு திணைக்கும் கூறப்பட்ட உரிப்பொருள் என்பது அந்தந்த திணையில் அந்தந்த நேரத்தில் நடக்கும் ஒழுக்கம் என அறியலாம். புணர்தல் என்பது ஒன்று சேர்தல், இருத்தல் என்பது பிரிவைப் பொறுத்து இருத்தல், ஊடல் என்பது தலைவி தலைவன் மீது கோபம் கொள்ளல், இரங்கல் என்பது பிரிவு தாங்காது தலைவி வருந்துதல், பிரிதல் என்பது தலைவன் தலைவி பிரிதல் ஆகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

ஆகிய ஐந்நிலங்களில் நிகழும் உரிப்பொருள் அகவொழுக்கத்திற்கு உரிய தலைவன் தலைவியின் வாழ்விற்கு உரிய பொருள் என்று அமைகின்றது. இதனையே தொல்காப்பியர்,

**"முதலொடு புணர்ந்த யாழோர் மேன**
**தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே" (தொல்,பொருள்,களவியல்-104)**

முதலொடு புணர்ந்த நிலமும் பொழுதுமாகிய முதற்பொருளோடு கூடிய யாழோர்மேன புணர்ச்சியானது தவலரும் சிறப்பின் கெடலருஞ் சிறப்பினையுடைய ஐந்நிலம் பெறும் என்றும் குறிஞ்சி முதலான ஐந்நிலத்திலும் நிகழ்கின்றது. நன்னாகையார் நெய்தலுக்குரிய உரிப்பொருளான இரங்கல் பற்றி எடுத்துரைப்பதை அறியலாம்.

**"சேறுஞ் சேறு மென்றலின் பண்டைத்தன்**
**மாயச் செலவாச் செத்து மருங்காற்று**
**மன்னிக் கழிகென் றேனே அன்னோ**
**ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ**
**கருங்கால் வெண்குருகு மேயும்**
**பெருங்குளம் ஆயிற்றென இடைமுலை நிறைந்தேன்" (குறுந்தொகை-325)**

இப்பாடல் வரியில் தலைவன் மேல் கோவம் கொண்ட தலைவி தலைவன் செல்வதாக கூறியும் அக்கோவத்தினால் நிலைப்பெற்று நீங்குக என்று கூறுய பின்னரும் தலைவி தலைவன் பிரிவால் அழுத என் கண்ணீரல் நிறைந்து கரிய காலையுடைய வெள்ளைநாரை உணவை உண்ணும் பெரியகுளம் போல ஆயிற்று. இரங்கல் என்பது தலைவி தலைவனுடைய பிரிவு தாங்காமல் வருந்துவதை காணமுடிகிறது. நெய்தல் நிலத்திற்குரிய உரிப்பொருளான ஒழுக்கத்தை பற்றியும் தலைவி தலைவனை பிரிந்து வருத்தமுடன் இருந்தமையை அறிந்துகொள்ளமுடிகின்றது.

**குறிஞ்சி திணை**

குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுதான யாமத்தில் மாலையில் தோன்றும் செங்கதிர்களால் பொன்னிறமாய் விளங்கும் கதிரவன் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் குளிர்காலமும் அக்கால நள்ளிரவும் காணப்படுகின்றன. தலைவியைக் காணும் தலைவனுக்கு களவொழுக்கத்தில் முதன்மை தரக்கூடியதாக விலங்குகளும், பறவைகளும் இணைப்பிரியாது உடனுறையும் காலமும் குளிர்காலமானது குறிஞ்சி நிலத்திற்குரியதாக காணப்படுகின்றது. இதனையே

**"அகவன் மகளே அகவன் மகளே**
**மனவுக்கோ பன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டேஅவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறுந்தொகை-23)**

என்னும் ஔவையார் பாடல் வழி அறியலாம். இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர், தலைவனின் பிரிவாள் தலைவியது வேறுபாட்டுன் காரணத்தை எண்ணவென்று தெரியாத செவிலித் தாய் முதலியோர் கட்டுவிச்சி சோதிடத்தில் குறி கேக்கும் பொழுது முதலில் அவள் நாட்டின் சிறப்புக்குரிய மலையான குறிஞ்சியை புகழ்ந்து பாடுவாள். இதனை அறிந்த தலைவியின் தோழி, செவிலிதாய் முதலியோர் தலைவியின் அன்பு பூண்ட தலைவருடைய குன்றத்தைப் பாடின் இவளது வேறுபாடு நீங்கும் என்பதின் புணர்தலின் வெளிப்படாக அமைகின்றது. இப்பாடல் பொருளில் தலைவியின் இயற்கையோடு புணர்ந்த உண்மை காதலை அறிந்த தோழியானவள் அறத்தோடு

CC BY

இருந்து சோதிட பெண்ணிடம் தலைவியின் காதலன் வாழும் மலையின் சிறப்பை புகழ்ந்து பாடுக தலைவியின் வேறுப்பட்ட தன்மையை நீங்கும் என்பதை தெரிந்துகொள்ளமுடிகின்றது.

**முல்லைத் திணை**

கார்காலத்தில் மாலைப்பொழுதில் முல்லை நிலத்திற்குரிய ஒழுக்கம் இருத்தலானது நிகழும். தலைவனும் தலைவியும் பிரிவைப் பொருத்து இரருத்தல் என்பது பிரிந்து சென்ற தலைவன் வரும் வரை தலைவி ஆற்றியிருத்தல் ஆகும். மரம், செடி, கொடிகள் நிறைந்த பசுமையான காட்டு நிலத்தில் தலைவன் தன்னிடம் வாழ்வார் என்பதில் தலைவியின் உள்ளத்தைக் கிளர்ச்சி பெறச் செய்து அன்புணர்வை பசுமையாக்கின்றது. ஆவணி, புரட்டாசி மாதங்களாகிய கார்காலமானது பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வரும் காலமாகும். இந்நிலத்தில் தலைவன் வரும் நேரம் மாலையாக அமைவது இயற்கையின் அழகில் தலைவியை காணவும் அங்கு தங்கி பொழுதை போக்குவதற்கு ஏற்ற பசுந்தரையும் பூங்காற்றும் மரநிழல்கள் போன்ற உரிப்பொருளுக்குரிய இருத்தல் ஒழுக்கத்திற்கு சிறந்த இடமாக இருப்பதை குறுந்தொகைப் பாடலுன் வழி அறியலாம்.

**“உள்ளினென் அல்லனோ யானே உள்ளி**
**நினைத்தனென அல்லனோ பெரிதே நினைத்து**
**மருண்டனென் அல்லனோ உலகத்துப் பண்பே**
**நீடிய மராஅத்த கோடுதோய் மலிர்நிறை**
**இறைத்துணச் சென்றற் றாஅங்கு**
**அனைப்பெருங் காமம் மீண்டுகடைக் கொளவே” (குறுந்தொகை-99)**

இப்பாடல் வரியில் தலைவன் பொருள் வழி பிரிந்து சென்று பொருளீட்டு மீண்டு வருகின்றான், அப்போது தலைவியின் தோழி நீ பிரிந்து சென்றதும் எம்மை நினைத்தீரோ என்று கேட்டஉடன் நான் எப்பொழுதும் நினைத்திருந்தேன் என பதில் உரைப்பதில் அவர்களுடைய ஆற்றிருத்தலானது பிரிவை பொருத்துயிருந்தமையை ஔவையார் பாடலில் வருணனை மிக்க காணப்படுகின்றது.

**மருதத் திணை**

மருத நில ஆற்றங்கரையில் நிகழும் ஊடலானது உரிப்பொருளின் ஒழுக்கமாக அமைகின்றது. பசுமை நிறைந்த நீர் வளமிக்க இந்நிலமானது தலைவன் தலைவியியை விட்டு பரத்தையை நாடி போவதற்கு இயல்பாக அமைகின்றது. தலைவி தலைவனை தன் வழிப்படுத்துவதற்காக கையாடப்படுகின்ற ஒரு கருவியாக ஊடலானது அமைகின்றது. பல்வேறுப்பட்ட ஆடம்பரச் செல்வங்களும் ஊடலை உண்டாக்கும் செல்வச் செருக்கே ஊடலுணர்ச்சிக்கு காரணமாக விளங்குகின்றது. வைகறை விடியல் பொழுதில் தலைவன் பரத்தையரிடத்தில் இருந்து விலகி வரும் காலமானது தலைவி ஊடுதலுக்குரிய காலமாக புலப்படுகின்றது. தலைவன் பரத்தையை நாடி செல்வதன் காரணமாக தலைவிக்கு ஊடலுக்கு ஏற்ற இடமாக மருத நிலம் அமைகின்றது. இதனையே புலவர் குழந்தை கூறிப்பிட்டுயிருப்பதை அறியலாம்.

**“திட்டத்தை மீறிச் சிதைக்கினும் நல்லொழுக்கச்**
**சட்டத்தை மீறல் தகவன்றால் - விட்டத்தின்**
**திணைமையழிந் தோரிடத்துச் செல்லேறின் மேற்கூரை**
**உண்மையிலே வீழ்ந்திடுமன்றோ?” (தொல்,காலத்தமிழர், ப.110)**

இப்பாடலில் நல் ஒழுக்கம், நல் எண்ணமும் மீறினால் ஒருவருக்கு தீமை நெறியீடும் என்பதை அறியமுடிகின்றது. மேலும் ஔவையார் பாடலில்,

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

**“அரிற்வயல் பிரம்பின் வரிப்புற விளைகனி**
**குண்டுநீ ரிலஞ்சிக் கொண்ட கதூஉம்**
**தண்டுறை ஊரன் பெண்டினை யாயிற்**
**பலவா குகநின் செஞ்சிற் படரே**
**ஓவா தீயு மாரி வண்கைக்**
**கடும்கட் டியானை நெடுந்தே ரஞ்சி**
**கொன்முனை இரவூர் போலச்” (குறுந்தொகை-91)**

இப்பாடல் வரியில் குளங்களின் புறத்தே பிரப்பங்கொடிகள் விளைந்து பழத்தை உடைய கொண்டைமீன் கவ்வுகின்ற இடமாக தண்ணீய நீர்த் துறைகளையுடைய ஊர்த் தலைவனின் மனைவியாக நீ இருப்பதால் உன் உள்ளத்தில் தின்பம் மேலும் அதிகமாகும். காலத்திற்கு எற்றவாறு கைமாறு கருதாமல் மழைத்தரும் மேகம் பொன்று வண்மையுடைய கையினையும் விரைந்த செலவுடைய ஆண்யானைகளையும் உயர்ந்த தேர்களை உடைய அதியமான் போர்களத்தில் அச்சத்தை உண்டாக்கும் இரவு பொழுதில் ஊரிலுள்ளார் போல் நீ துயிலும் கொள்வது சில நாட்களே ஆகுக. பரத்தையரிடமிருந்து திரும்பி வந்த தலைவனை தலைவி ஏற்றுக்கொள்கிறாள். அப்பொழுது தோழியானவள் தலைவியிடத்து பரத்தையரை நம்பி பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் சொல்லமாட்டான் என்பது என்ன நிச்சியம் என்று கேட்கிறாள். அதன் பிறகு தலைவனை ஏற்றுக்கொணைடால் மேலும் துன்பத்திற்கு ஆளாகிவிடுவாய் என்று உரைப்பதன் மூலம் தலைவியின் ஊடலுக்கான நிலைப்பாடுகளை தோழி கேள்விக்கொண்டதை உணர்த்தும் உள்ளுறை வெளிப்பாட்டாக ஔவையார் பாடலில் காணமுடிகின்றது.

**நெய்தல்திணை**

நெய்தல் நிலத்திற்குரிய ஆறு பெரும் பொழுதுகள் சூரியன் மறையும் நேரமானது நெய்தல் நிலத்தின் இரங்கல் ஒழுக்கமாக நிகழும். கடல் அலைகள் நெடிய தொலைத்தூரம் எழுந்து பேரோளி சத்தம் கொண்ட கடல் அலைகள் சிறிது அமைதியாக சத்தமில்லாமல் மறையும் அந்நிகழ்வு கடலலைகள் தொட்டு போகும் மணல்மேடுகள் உண்டாக்குகின்ற கரையில் கடலலைகளால் தோன்றி மறைவது பொன்ற நிலையில் கடற்கரை வாழ்க்கையானது பிறப்பும் இறப்பும் ஒரு நிலையாமையை உணர்த்துகின்றது. சூரியன் மறையும் நேரத்தில் சென்று தொழில் புரிபவர்களை காலை நேரத்தில் தான் கடல் வழிச் சென்றவர்களை எதிர்ப்பாத்திருக்கும் காலமாக இருந்தமையில் இரங்கல் உணர்வின் வெளிப்பாடுகளாக உண்டாக்குவதை ஔவையார் பாடல் (குறுந்-102), நன்னாகையார் பாடலிலும் (குறுந்-172) காணமுடிகின்றது.

உதாரணம்,

**“தாஅு வலஞ்சிறை நொப்பறை வாவல்**
**பழுமரம் படரும் பையுன் மாலை**
**எமிய மாக ஈங்குத் துறந்தோர்**
**தமிய ராக இனியர் கொல்லோ**
**ஏழூர்ப் பொதுவினைக் கோரூர் யாத்த**
**உலைவாங்கு மதிதோல் போலத்**
**தலைவரம் பறியாது வருந்துமென் னெஞ்சே” (குறுந்தொகை-172)**

இப்பாடலில் அழகான சிறகும் மென்மையான பறக்கும் தன்மையுடைய வெளவால் பழுத்த

மரங்களை நினைத்து செல்லும் அதுபோல வரைவிடை வைத்து பிரிந்த தனி ஒருவருக்கு துன்பத்தை தரும் மாலைக் காலத்தில் தலைவன் தம்மை இங்கு விட்டு பிரிந்து சென்றதை நினைத்து என் மனம் வருந்துகின்றது பின்னர் தலைவன் என்னை விட்டு பிரிந்து எங்ஙனம் இருப்பார் என்பதின் தலைவியின் வருத்தை தோழியிடம் உரைப்பதாக காணமுடிகின்றது. நன்னாகையார் பாடலில் நெய்தல் நிலத்தின் ஒழுக்கமான இரங்குதலை புலப்படுத்துகின்றது.

**பாலைத்திணை**

பாலை நிலத்திற்குரிய உரிப்பொருளுக்குரிய ஒழுக்கமாக மணலில் பிரிதலில் வேனிற்காலமானது நண்பகலில் நிகழ்கின்றது. மாசி முதல் ஆடி ஈராக உள்ள பின்பனி, இளவேனில், முதுவேனில் மூன்று பெரும் பொழுதுகளும் மழையின்றி இருப்பதால் அக்காலம் அயலூர் செல்வதற்கு ஏற்றக்காலமாக அமைகின்றது. அந்நிலையில் தலைவன் தலைவியை பிரிந்து போவதற்கான நிகழ்வுகள் பாலை நிலமாக அமைகின்றது. பாலையானது குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் வெயிலில் அதிக்கப்படியான வெப்பத்தினால் மரச்செடி கொடிகளின் வளம் குறைந்து உலர்ந்து நிலங்கள் ஈரத்தன்மை இழந்து வறண்ட தன்மையால் நீர் நிலைகள் வற்றியும் பசியால் வலிமையிழந்த கொடிய விலங்குகள் இருக்கம் வழியில் செல்வோர்க்குத் துன்பம் உண்டாக்கும் வகையில் தலைவனை பிரிந்திருக்கும் தலைவிக்கு மனதிற்கு தோன்றும் உணர்வாக ஔவையார் (குறுந்-30), நன்னாகையார் (குறுந்-28) அழகாக வெளிப்படுத்துகின்றனர்.

உதாரணம்,

**"மூட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்**
**ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்**
**அலமரல் அசைவளி அலைப்பவென்**
**உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே" (குறுந்தொகை-28)**

ஔவையார் பாடலில் தலைவன் வரை பொருளுக்காகப் பிரிந்த காலத்தில் அவன் விரைந்து வராமைப்பற்றிப் கவலையுற்ற தோழியை நோக்கி கூறும் பொழுது என் துன்பம் அறியாமல் கவலையின்றி ஊரில் உள்ளவர்களின் தூக்கத்தை நான் தாக்குவேனோ இல்லை ஆவென்றும் ஒல்லென்றும் ஒலி உண்டக்கி எழுப்புவேனா என்று இன்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கும் தலையின் பிரிதல் நிலையில் துன்பத்தின் வலியை காணமுடிகின்றது.

மேலும்,

**"கேட்டிசின் வாழி தோழி அல்கற்**
**பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇய**
**வாய்த்தகைப் பொய்க்கனா ஏற்றெழுந்து**
**அமளி தைவழந் தன்னே குவளை**
**வண்டுபடு மலரிற் சாஅய்த்**
**தமியேன் மன்ற அளியேன் யானே" (குறுந்தொகை-30)**

நன்னாகையார் பாடலில் தலைவன் பொருள் தேடுவதற்காக தலைவியை விட்டு பிரிந்து சென்ற நிலையில் தலைவனை நினைத்து தலைவி இரவு நேரத்தில் துயில் கொள்ளும் பொழுது கனவில் தலைவன் தன்னுடன் இருப்பதாக உண்மையான நிகழ்ச்சியாக தோன்றுகின்றது. தலைவன் படுக்கையில் இருப்பதாக நினைத்து அவனை தழுவ முயல்கின்றாள். ஆனால் அவள் தழுவியது

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.32*

படுக்கை தானே தவிர தலைவன் இல்லை என்பதை உணர்ந்த தலைவி தோழியிடம் தன்னுடைய வருத்ததை தெரிவிப்பதாக நன்னாகையார் குறுந்தொகையில் மிக அழகாக வெளிப்படுத்தி இருப்பதை காணமுடிகிறது.

**முடிவுரை**

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில், ஔவையார் (15 பாடல்கள்) மற்றும் கச்சிப்பேட்டு நன்னாகையார் (8 பாடல்கள்) ஆகியோர் இயற்றிய பாடல்களில், ஐந்திணையின் அடிப்படையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற முப்பொருள்களைக் கொண்ட அகத்திணை பதிவுகள் இடம்பெற்றுள்ளன; இதில் ஔவையார் குறிஞ்சி (23, 29), முல்லை (99, 183, 200), மருதம் (80, 91, 364), நெய்தல் (102), பாலை (15, 28, 39, 43, 388) ஆகிய திணைகளிலும், நன்னாகையார் முல்லை (287), நெய்தல் (118, 172, 197, 325), பாலை (30, 180, 192) ஆகிய திணைகளிலும் பாடல்கள் இயற்றியுள்ளதன் மூலம், குறிஞ்சி, மருதம் திணைகளில் நன்னாகையார் பாடல்கள் இல்லை என்பதும், தலைவன்–தலைவியின் அகநிலை ஒழுக்கங்கள், அவற்றுடன் இயைந்த இயற்கைச் சூழல்கள், காலநிலை, மக்கள் வாழ்வியலை நுண்ணியமாகக் கூறியிருப்பதும் தெரிகின்றன.

**பார்வைநூல்கள்**

**[1]. இராமசிப்பிரமணியன். த.வ., தொல்காப்பியம் (பொருளதிகாரம்), பூம்புகார் பதிப்பகம், சென்னை, மு.ப.2008.**
**[2]. ச.வேலுமணி, சங்க கால ஆயர் வாழ்வியல் ப.10**
**[3]. சி.பொ.சீனிவாசன், சங்க இலக்கியத்தில் அகவுணர்வு உயிரினப் பயன்பாடு, ப.20**
**[4]. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், பூம்புகார் பதிப்பகம், சென்னை, பதிப்பு-1985.**
**[5]. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், உ.வே.சா. பதிப்பகம், சென்னை, ஏழாம் பதிப்பு-1960.**
**[6]. அ.தட்சணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பணெபாடும், ப.11.**
**[7]. தொல்காப்பிய பொருளதிகாரம் களவியல் உரை, ப.145, பாடல்-104.**
**[8]. சாமிநாதைய்யர், உ.வே,. குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை,மு.பதிப்பு-1937.**
**[9]. சௌரிப்பெருமாள் அரங்கனார். தி, குறுந்தொகை மூலமும் புத்துரையும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,பதிப்பு-2015.**